**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 210/2023**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 20.06.2025.**

| | |
|---|---|
| **Name : பூபதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent petition filed and allowed. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து போது 11.10.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, வசந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.261/2022 u/Sec. 279, 304(ஏ) IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகும்.

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை எப்போது விசாரித்தார் என்றால் 25.01.2023ம் தேதி விசாரித்தார். எழுதிய புகாரை காவல் நிலையத்தில் கொடுத்தார். புகாரில் காயமடைந்த மற்றொரு நபரின் விவரம் பற்றி எழுதி தான் கொண்டு வந்தார்களா என்றால் ஆமாம். ஈச்சர் வாகனத்தின் பதிவெண், ஓட்டுநர்

விவரம் அனைத்தையும் எழுதி தான் கொண்டு வந்தார்களா என்றால் ஆமாம். நான் சொல்வது போல் புகார்தாரர் புகாரை எழுதி கொடுக்கவில்லை என்றும் விவரங்களை நானே பூர்த்தி செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் ஈச்சர் வாகன ஓட்டுநர், அதன் பதிவெண் தெரியாது என்றும் காயம் அடைந்த மற்றொரு நபர் குறித்த விவரம் தெரியாது என நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.